CNR NO: TNTH13-000970-2017

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் திங்கட்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 780/2017

அப்துல் மஜீது ..... **புகார்தாரர்**

/ எதிர் /

பாண்டியராஜ் ..... **எதிரி**

<u>வழக்கின் சுருக்கம்</u>

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td>புகார்தாரர்:
அப்துல் மஜீது (54/2026),
த/பெ.பக்கீர்முகமது,
க.எண்.133, மேற்குதெரு, புதூர்,
போடிநாயக்கனூர்,
தேனி மாவட்டம்.</td><td>எதிரி:
பாண்டியராஜ் (43/2026),
த/பெ.மாரியப்பன்,
C/o.இந்தியன் வங்கி,
புதுக்கோட்டை வழி, தேவாரம் ரோடு,
பொட்டிப்புரம் புதூர் பேரூராட்சி,
போடிநாயக்கனூர் தாலுகா,
தேனி மாவட்டம்.</td></tr>
</table>

2.	எதிரியின் வயது	43/2026.		
3.	தந்தை/கணவர் பெயர்	த/பெ.மாரியப்பன்.		
4.	மதம்	இந்து.		
5.	தொழில்	கூலி.		
6.	முகவரி	C/o.இந்தியன் வங்கி, புதுக்கோட்டை வழி, தேவாரம் ரோடு, பொட்டிப்புரம் புதூர் பேரூராட்சி.		
7.	தாலுகா, மாவட்டம்	போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்.		
8.	சம்பவம் நிகழ்ந்த நாள்	பொருந்தாது.		
9.	கைது	--		
10.	பிணையில் விடுவித்தல்	--		
11.	எதிரி சிறையில் இருந்த நாட்கள்	--		
12.	புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்	09.05.2017.		
13.	கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி	05.07.2017.		
14.	அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி	20.10.2017.		
15.	கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்	20.10.2017.		
16.	விசாரணை துவக்கம்	16.03.2018.		
17.	சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்	Witness	Chief	Cross
		PW1	16.03.2018	27.02.2026
18.	விசாரணை முடிவு	24.03.2026.		
19.	கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்	13.03.2026.		

20.	பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்	இல்லை.
21.	தீர்ப்பு விவரம்	தண்டனை.
22.	தீர்ப்புரை நகலை வழங்குதல்	வழங்கப்பட்டுள்ளது.
23.	தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள்	07.08.2017 முதல் 20.10.2017 வரை, 29.05.2019 முதல் 18.12.2023 வரை மற்றும் 04.03.2024 முதல் 17.02.2026 வரை – எதிரி மீது பிணையில் செல்லா பிடி கட்டளை நிலுவையில் இருந்தது.
24.	மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு	The Honorable Madurai Bench of Madras High Court, Madurai in CRL.RC(MD).No.1563 of 2025 dated.10.12.2025.
25.	பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு	வழங்கப்பட்டுள்ளது.
26.	காலதாமதத்திற்கான காரணம்	புகார்தாரர் தரப்பு சாட்சியை எதிரி தரப்பில் காலதாமதமாக குறுக்கு விசாரணை செய்ததும் மற்றும் 07.08.2017 முதல் 20.10.2017 வரை, 29.05.2019 முதல் 18.12.2023 வரை மற்றும் 04.03.2024 முதல் 17.02.2026 வரை – எதிரி மீது பிணையில் செல்லா பிடி கட்டளை நிலுவையில் இருந்ததும்.

*****

இவ்வழக்கு 05.07.2017 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 27.03.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.A.M.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.R.நாகமணிசெந்தில் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

தீர்ப்புரை

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 மற்றும் 142 மற்றும் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 200-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **மனுவின் சுருக்கம்**:

2.1). எதிரி, பொட்டிப்புரம் புதூர், இந்தியன் வங்கி கிளையில் நகை மதிப்பீட்டாளராகப் பணிபுரிந்து வந்ததாகவும், நகை கொடுக்கல், வாங்கலில் எதிரிக்கும், புகார்தாரருக்கும் நன்கு பழக்கம் என்றும், மேற்படி பழக்க வழக்கத்தின் அடிப்படையில், எதிரி, புகார்தாரரை அணுகி, 15 பவுன் பழைய தங்க நகைகளை விற்றுக் கொடுப்பதாக வாக்குறுதி அறித்து, புகார்தாரரிடம் கடந்த 17.06.2016 அன்று ஒரு பவுன் ரூ.15,000/-ம் வீதம், மொத்தம் 15 பவுனுக்கு ரூ.2,25,000/-ம் என்று பேசி, எதிரி, புகார்தாரருக்கு தர வேண்டியிருந்ததாகவும், ஆனால், எதிரி 18.06.2016 அன்று ரூ.65,000/-ம் மட்டும் ரொக்கப் பணமாக புகார்தாரரின் கைவசம் கொடுத்ததாகவும், மீதமுள்ள ரூ.1,60,000/-ம் பணத்தை எதிரி மேற்படி நகையை விற்பனை செய்துவிட்டு 25.06.2016-ஆம் தேதிக்குள் புகார்தாரரிடம் கொடுத்து விடுவதாக வாக்குறுதி அளித்ததாகவும், ஆனால், மேற்படி தேதியில் எதிரியை, புகார்தாரர் தொடர்பு கொண்டபோது, எதிரி மேற்படி நகைகள் செல்லும் வழியில் தொலைந்து விட்டதனால், பணம் கொடுக்க முடியாது என்று பொய் கூறி, மீதப்பணத்தை புகார்தாரரிடம் கொடுக்க மறுத்துவிட்டதாகவும், பின்னர் எதிரியிடம், புகார்தாரர் கெஞ்சி கேட்டுக்கொண்டதன்பேரில், எதிரி, மேற்படி கடனிற்கு ஆதரவாக 03.02.2017 என தேதியிட்டு, போடிநாயக்கனூர் கிளையின், 851482402 என்ற வங்கி கணக்கு எண் கொண்ட, இந்தியன் வங்கியின் 411042 என்ற எண் கொண்ட Crossed

காசோலை ஒன்றை ரூ.1,60,000/-த்திற்கு புகார்தாரரிடம் கொடுத்ததாகவும்,

2.2). பின்னர் எதிரி உறுதியளித்ததன்பேரில், மேற்படி காசோலையைப் பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, போடிநாயக்கனூர் கிளையில் 04.02.2017 அன்று வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் “Funds Insufficient” என்ற காரணத்தினால் காசோலையானது 04.02.2017 அன்று திருப்பப்பட்டுவிட்டதாகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையைக் கேட்டு 10.02.2017 அன்று எதிரிக்கு, புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை, எதிரி 14.02.2017 அன்று பெற்றுக்கொண்டு, எதிரி, புகார்தாரரிடம் சென்று கடந்த 20.02.2017-ஆம் தேதி தொடர்பு கொண்டு, 29.03.2017-ஆம் தேதிக்குள் மேற்படி காசோலைக்கான பணத்தை கொடுத்துவிடுவதாக வாக்குறுதி அளித்ததாகவும், பின்னர் எதிரி, புகார்தாரரை 27.03.2017-ஆம் தேதி தொடர்பு கொண்டு, மேற்படி காசோலையை திரும்பவும் வங்கியில் செலுத்தி பணத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறியதன்பேரில், மீண்டும் மேற்படி காசோலையைப் பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, போடிநாயக்கனூர் கிளையில் 28.03.2017 அன்று வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் “Funds Insufficient” என்ற காரணத்தினால் காசோலையானது 28.03.2017 அன்று திருப்பப்பட்டுவிட்டதாகவும், மேற்படி காசோலைக்குரிய தொகையைக் கேட்டு 06.04.2017 அன்று எதிரிக்கு ம.சா.1 அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை, எதிரி 10.04.2017 அன்று பெற்றுக்கொண்டு, பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றும், மேலும், எதிரி காசோலைக்குரிய தொகையைத் திருப்பிச் செலுத்தாமல், எதிரி தனது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற விபரம் தெரிந்து கொண்டே புகார்தாரருக்கு இக்காசோலையை வழங்கி ஏமாற்றியுள்ளார் என்றும்,

2.3). எனவே, எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-

ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிரிக்கு தண்டனை வழங்கி உரிய இழப்பீட்டை எதிரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 20.10.2017-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறியுள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). <u>**புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் அப்துல்மஜித் என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியிடப்பட்டுள்ளன.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்குப் பாதகமாக உள்ள அம்சங்களைத் தொகுத்து 13.03.2026-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறியபோதிலும், எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால், எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் முன்நிறுத்தப்படாத காரணத்தினால், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6). **<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

<u>8). **தீர்வுக்குரிய பிரச்சனை**</u>:

8.1). இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **<u>தீர்வும் அதன் காரணமும்</u>**

9.1). வழக்கு காசோலை எதிரியின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 வழக்கு காசோலையானது 03.02.2017-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசேலையானது 04.02.2017 மற்றும் 28.03.2017 ஆகிய தேதிகளில் “Funds Insufficient”

என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.1, ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.5 ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலை திருப்பப்பட்டவுடன் எதிரிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்புகளானது 10.02.2017 மற்றும் 06.04.2017 ஆகிய தேதிகளில் புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரி 14.02.2017 மற்றும் 10.04.2017 ஆகிய தேதிகளில் பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.3, ம.சா.ஆ.4, ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 வரையான ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாகப் புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 09.05.2017-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 05.07.2017-ஆம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், காசோலையானது முதலில் 04.02.2017-ஆம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு, அது குறித்து எதிரிக்கு 10.02.2017-ஆம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு, மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பானது 14.02.2017-ஆம் தேதி இந்த எதிரியால் பெறப்பட்டுள்ளது. மேலும், இந்த காசோலை மீண்டும் ஒரு முறை 28.03.2017-ஆம் தேதி புகார்தாரரால் வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்படி காசோலையானது அன்றைய தினமே, அதாவது, 28.03.2017-ஆம் தேதியே போதிய பணம் இல்லை என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது எனவும், இது குறித்து 06.04.2017-ஆம் தேதி எதிரிக்கு மீண்டும் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதனை எதிரி 10.04.2017-ஆம் தேதி

பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

9.4). இவ்வாறாக முதலில் 04.02.2017-ஆம் தேதி தாக்கல் செய்த காசோலையானது பணமின்றி திரும்பியதாக 10.02.2017-ஆம் தேதி எதிரிக்கு, புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ள நிலையில், மேற்படி அறிவிப்பையும் எதிரி பெற்றுக்கொண்டுவிட்ட நிலையில், மீண்டும் அந்த காசோலையை புகார்தாரர் வசூலுக்கு தாக்கல் செய்து, மீண்டும் ஒருமுறை காசோலை போதிய பணம் இல்லை என திரும்பியதாகவும், அதனால் மீண்டும் ஒருமுறை 06.04.2017-ஆம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பை 2-வது முறை அனுப்பியதாகவும், 2-வது முறை அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படும் வழக்கறிஞர் அறிவிப்பையும் எதிரி பெற்றுக் கொண்டதாகச் சொல்லி, 2-வது முறை அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்ட தினத்திலிருந்து 15 நாட்கள் அவகாசம் வழங்கி, சரியாக 29 நாட்கள் கழித்து 09.05.2017-ஆம் தேதி, அதாவது, 2-வது முறை மேற்படி காசோலையானது வசூலுக்கு செலுத்தப்பட்டு பணம் இன்றி திரும்பிய பிறகு, 2-வது முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி, அந்த அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டு காசோலைக்குரிய தொகையை செலுத்தாமல் இருந்ததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக புகார்தாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9.5). இவ்வாறாக ஒரே காசோலையை இரண்டு முறை வசூலுக்கு தாக்கல் செய்வது ஏற்புடையதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Sadanandan Bhadran vs Madhavan Sunil Kumar in Criminal Appeal No.589 of 1992, dated on 28 August, 1998 reported in AIR 1998 SUPREME COURT 3043, (1999) MAD LJ (CRI) 39** என்ற வழக்கின் தீர்ப்பில் 3-வது பக்கம், 2-வது பத்தியில்,

ii) a cheque can be presented for encashment on any number of occasions within the period

of its validity but there can be only one cause of action under Section 142(b) arising from its last dishonour; **என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஒரு காசோலையானது அதன் செல்லும் காலம் வரை எத்தனை முறை வேண்டுமானாலும் வசூலுக்கு தாக்கல் செய்து கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி காசோலையை ஒன்றுக்கும் மேற்பட்ட முறை அந்த காசோலையின் செல்லும் காலம் வரையில் வசூலுக்கு செலுத்திய புகாரின் செயல் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.**

9.6). **அதே வேளையில்** 04.02.2017-**ஆம் தேதி போதிய பணம் இல்லை என திரும்பிய காசோலைக்காக** 10.02.2017-**ஆம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு, அது** 14.02.2017-**ஆம் தேதி இந்த எதிரியால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அதே காசோலை** 28.03.2017-**ஆம் தேதி மீண்டும் வசூலுக்கு செலுத்தப்பட்டு, அந்த காசோலை அன்றைய தினமே போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டு, அதற்காக** 06.04.2017-**ஆம் தேதி அன்று இந்த எதிரிக்கு, புகார்தாரரால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டு, அதனை இந்த எதிரி** 10.04.2017-**ஆம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் புகார்தாரர் தரப்பே நிருபித்துள்ளது என்பதால், ஒரு காசோலையானது எத்தனை முறை வேண்டுமானாலும் அதன் செல்லும் காலத்திற்குள்** (validity period) **வசூலுக்கு தாக்கல் செய்யப்படலாம் என மேற்படி முன் தீர்ப்பின்படி கருத முடிந்தாலும், அவ்வாறு வசூலுக்கு செலுத்தப்பட்டு பணமின்றி திரும்பிய பிறகு இரண்டு முறை காசோலை தொகையை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப முடியுமா? இவ்வாறு இரண்டு முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினால் எந்த முறை அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் இருந்து வழக்குமூலம்** (cause of action) **எழுகிறது என்பது குறித்து பரிசீலனை செய்கையில், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Msr Leathers vs S. Palaniappan And Anr in CRIMINAL APPEAL NOS. 261-264 OF 2002 dated on 10 September, 2013 reported in 2013 SCC 10 572, பத்தி 10-ல்**

10. In the result, their Lordships overruled the decision in Sadanandan Bhadran’s case

(supra) and Held that the prosecution based on second or successive dishonour of the cheque is also permissible So long as it satisfies the requirements stipulated under the proviso to Section 138 of the Act என குறிப்பிட்டுள்ளது. எனவே, 2-வது முறையாக காசோலையானது வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு, 2-வது முறையாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொள்ளப்பட்ட பிறகு எதிரி பணத்தை செலுத்தவில்லை என்பதால் 2-வதாக ஏற்பட்ட காசோலை பணமின்றி திரும்பிய செய்கைக்காக புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்யலாம் என்று மேற்படி முன் தீர்ப்பின்படி இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.7). மேலும், வழக்கு காசோலையானது எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபட கொடுக்கப்பட்டதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், எதிரி காசோலையையும், அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்று மட்டுமே குறிப்பிட்டுள்ளார். மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் விசாரணை வினவியபோது, எதிரி பொய் சாட்சி என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளாரே தவிர, வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என எதிரி மறுக்கவில்லை. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 மற்றும் 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.8). மேற்படி சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுத்துரைக்கும் வகையில், எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய நேரடியாக சாட்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. மாறாக வழக்கை இதர சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகவோ, அல்லது சூழ்நிலை, சந்தர்ப்பத்தின் வாயிலாகவோ மறுத்துரைக்கலாம் என்று

மாண்பமை உச்ச நீதிமன்றம் பல்வேறு முன் வழக்குகளில் வழிவகை செய்துள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில்,

9.9). எதிரி தரப்பில் புகார்தாரர் பல்வேறு நபர்களுக்கு எதிராக இந்த நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாகவும், எனவே, அவர் வட்டிக்கு பணம் கொடுக்கும் நபர் என்றும் எதிரி தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது குறித்து பரிசீலனை செய்கையில், புகார்தாரர் அப்துல் மஜீத் தனது குறுக்கு விசாரணையில், "**இந்த நீதிமன்றத்தில் எதிரியை தவிர வேறு யார் மீதாவது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ஆமாம். ஜெயபால் என்பவர் மீது சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.377/2022 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அதேபோல் ஸ்டாலின் என்பவர் மீது ஆண்டு பட்டிகை வழக்கு எண்.82/2013 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். இந்த இரண்டு வழக்குகளும் இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால், சரிதான். மேலே சொன்ன வழக்குகளில் உள்ள நபர்களுக்கும், இந்த எதிரிக்கும் வட்டிக்கு நான் பணம் கொடுத்ததால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.10). இந்த வழக்கின் எதிரிக்கு இந்த வழக்கின் புகார்தாரர் அப்துல் மஜீத் வட்டிக்கு பணம் கொடுத்ததாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, அதன் பிறகு எதிரி தரப்பில், "**எதிரியின் தம்பி ரூ.20,000/- பணம் வாங்கியிருந்தார் என்றும், அதனை வட்டியுடன் திருப்பி செலுத்தி விட்டார் என்றும், அதற்கு ஆதரவாகத்தான் எதிரி வழக்கு காசோலையை கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல**" என்பதாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9.11). ம.சா.1 அப்துல் மஜீத் என்பவரை எதிரி தரப்பில் ஏற்கனவே செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில், இந்த வழக்கின் புகார்தாரர் எதிரிக்கு வட்டிக்கு கடன்

கொடுத்ததாகவும், அதற்கு தரப்பட்ட காசோலை எனச் சொல்லிவிட்டு, அதன் பிறகு எதிரியின் தம்பி செந்தில் என்பவருக்கு ரூ.20,000/-ம் இந்த வழக்கின் புகார்தாரரான அப்துல் மஜீத் கடன் கொடுத்ததாகவும், மேற்படி செந்தில் அந்த பணத்தை திருப்பி செலுத்தி விட்டதாகவும், அதற்கு ஆதரவாகத்தான் இந்த வழக்கின் எதிரியான பாண்டியராஜ் என்பவர் காசோலை கொடுத்ததாகவும், அந்த காசோலையைதான் எதிரி தவறாக பயன்படுத்தி விட்டதாகவும் எதிரி தரப்பில் முன்னுக்கு பின் முரணாக இரண்டு விபரங்களை சொல்லி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9.12). எனவே, புகார்தாரர், எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுத்தாரா? அல்லது எதிரியின் தம்பி செந்தில் என்பவருக்கு வட்டிக்கு பணம் கொடுத்தாரா? அதற்கு ஆதரவாகதான் இந்த வழக்கு காசோலை கொடுக்கப்பட்டதா? என்பது குறித்து எதிரி தரப்பிலேயே முன்னுக்குப் பின் முரணாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளதால், மேற்படி விபரம் வழக்கிற்காக மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.13). எனவே, புகார்தாரர், எதிரிக்கு வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வந்ததாக சொல்லும் விபரம் எதிரி தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.14). மேலும், எதிரி தரப்பில் இந்த வழக்கின் எதிரி பாண்டியராஜ் என்பவரின் தம்பியான செந்தில் என்பவருக்குதான் இந்த புகார்தாரர் அப்துல் மஜீத் கடன் கொடுத்ததாகவும், அதனை அவர் திருப்பி செலுத்தி விட்டதாகவும் எதிரி தரப்பில் சொல்லப்பட்டு இருந்தாலும்கூட, அதனை நிரூபிக்கும் விதமாக எதிரியின் தம்பிகூட இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்பதிலிருந்து, மேற்படி விபரம் உண்மையில்லை என்பதால்தான், எதிரியின் தம்பிகூட இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை எனக் குறிப்பிடும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது என்று

இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.15). எனவே, எதிரி, புகார்தாரருக்கு ரூ.1,60,000/-ம் தர வேண்டியிருந்ததாகவும், மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர், இந்தியன் வங்கி கிளையில் மாற்றக்கூடிய 411042 என்ற எண்ணுள்ள காசோலை ஒன்றை ரூ.1,60,000/-த்திற்கு 03.02.2017 என தேதியிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளதும், மேற்படி காசோலையை புகார்தாரரும் போடிநாயக்கனூர் கிளை, ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என்ற காரணம் காட்டி 04.02.2017 மற்றும் 28.03.2017 ஆகிய தேதிகளில் காசோலை திருப்பப்பட்டுள்ளதும், எதிரி புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தனது வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்று தெரிந்தே காசோலையைக் கொடுத்து மோசடி செய்துள்ளதும் நிரூபணமாகிறது. எனவே, எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் இவ்வழக்கில் அனுமானிக்கப்பட்டுள்ளதாலும், மேலும், இவ்வழக்கு கடந்த 8 வருடங்களாக நிலுவையில் இருந்து வருவதாலும், அதனால் புகார்தாரருக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலுக்கு வழக்கு காசோலைத் தொகை கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் இழப்பீட்டுத் தொகையாக புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.16). புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலித்த வகையில், எதிரி மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எதிரியை இந்நீதிமன்றம் குற்றவாளி எனத் தீர்மானிக்கிறது.

10).**<u>தீர்வு</u>**:

10.1). முடிவாக, புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு தண்டனையாக ஒரு வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(2)-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. காசோலைத் தொகையான ரூ.1,60,000/-த்தை இழப்பீட்டுத் தொகையாக கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் எதிரி, புகார்தாரருக்கு இந்த தீர்ப்பு தேதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 431 மற்றும் உ/இ பிரிவு 64 இ.த.ச-ன் படி எதிரிக்கு 1 மாத காலம் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

10.2). மேற்படி தண்டனை காலங்கள் முடிந்த பிறகும் எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 421-ன் படி புகார்தாரர் நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்து கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது.

10.3). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.27 17:43:38 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.

1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்:

1.	ம.சா.1	திரு.அப்துல்மஜித்	புகார்தாரர்

2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்:

1.	ம.சா.ஆ.1	03.02.2017-ஆம் தேதிய காசோலை எண்.411042 என்ற எண்ணிட்ட மறுக்கப்பட்ட அசல் காசோலை.	ம.சா.1
2.	ம.சா.ஆ.2	04.02.2017-ஆம் தேதிய ரிட்டன் மேமோ அசல்.	ம.சா.1
3.	ம.சா.ஆ.3	10.02.2017-ஆம் தேதிய சட்ட அறிவிப்பின் அலுவலக நகல்.	ம.சா.1
4.	ம.சா.ஆ.4	அது எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதற்கான அஞ்சலகதுறையின் பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல்.	ம.சா.1
5.	ம.சா.ஆ.5	28.03.2017-ஆம் தேதிய ரிட்டன் மெமோ அசல்.	ம.சா.1
6.	ம.சா.ஆ.6	06.04.2017-ஆம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல்.	ம.சா.1
7.	ம.சா.ஆ.7	அதை எதிரி பெற்றுக் கொண்டதற்கான 10.04.2017-ஆம் தேதிய அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல்.	ம.சா.1

3). புகார்தாரர் தரப்பு சான்றுப் பொருள்களின் பட்டியல்: தாக்கல் இல்லை.

4). எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருட்களின் பட்டியல்: தாக்கல் இல்லை.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.27 17:43:44 +0530

நீதித்துறை நடுவர்
போடிநாயக்கனூர்.